**செய்தி வெளியீடு எண்: 396** **நாள்: 04.07.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.7.2019) தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி, 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள EKKI Homa Pvt. Ltd., Syrma Technology Pvt. Ltd., மற்றும் Renaatus Procon Pvt. Ltd., ஆகிய 3 நிறுவனங்களின் வணிக உற்பத்தியை துவக்கி வைத்தார்கள். மேலும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி 2,244 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்படவுள்ள 10 நிறுவனங்களுக்கும், செய்யாறு, ராணிப்பேட்டை மற்றும் பர்கூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் 130 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்படவுள்ள 3 நிறுவனங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில், 2019–ஆம் ஆண்டு ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்த மாநாட்டில் 10 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் 3,00,431 கோடி ரூபாய் முதலீட்டிற்கான 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

அதன்படி, கோயம்புத்தூர், கணபதி பகுதியில் 15 கோடி ரூபாய் முதலீட்டில் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், விசை பம்புகளை உற்பத்தி செய்யக்கூடிய கோயம்புத்தூர் எக்கி குழுமம் மற்றும் ஜெர்மனியின் ஹோமா குழுமத்தின் கூட்டு நிறுவனமாகிய EKKI Homa பிரைவேட் லிமிடெட் நிறுவனம்;

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம், மெப்ஸ் தொழிற்பூங்காவில் 75 கோடி ரூபாய் முதலீட்டில் 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் Syrma Technology பிரைவேட் லிமிடெட் நிறுவனம்;

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற் பூங்காவில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்யும் Renaatus Procon பிரைவேட் லிமிடெட் நிறுவனம்;

என மொத்தம் 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள மூன்று நிறுவனங்களின் வணிக உற்பத்தியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

மேலும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி, காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் 730 கோடி ரூபாய்

முதலீட்டில் 875 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள காற்றாலைகளுக்கான இறக்கைகள் மற்றும் அதற்கான சிறப்பு தனிம கலவைகளை (Composites) உற்பத்தி செய்யக்கூடிய அமெரிக்க நிறுவனமாகிய TPI Composites நிறுவனம்;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற் பூங்காவில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள பிர்லா குழுமத்தின் ஹைடெக் கார்பன் நிறுவனம்;

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரத்தில் 100 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள பயன்படுத்தப்பட்ட வாகனங்களை சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு மறுசுழற்சி செய்யக்கூடிய Mahindra MSTC Recycling பிரைவேட் லிமிடெட் நிறுவனம்;

திருவள்ளூர் மாவட்டம், இண்டோஸ்பேஸ் தனியார் தொழிற் பூங்காவில் 150 கோடி ரூபாய் முதலீட்டில் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள Mahindra Steel Service Centre லிமிடெட் நிறுவனம்;

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையத்தில் 370 கோடி ரூபாய் முதலீட்டில் 1300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள மோத்தி குழுமத்தின் Mothi Spinners Pvt. Ltd., மற்றும் Lucky Weavess India Pvt. Ltd., ஆகிய நிறுவனங்கள்;

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் கிராமத்தில் 150 கோடி ரூபாய் முதலீட்டில் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள காளீஸ்வரி குழுமத்தின் Kaleesuwari Refinery & Industry Pvt. Ltd., நிறுவனத்தின் புதிய பயோடீசல் உற்பத்தி தொழிற்சாலை;

சேலம் மாவட்டம் – வாழப்பாடி, ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிபாளையம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் – மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் 130 கோடி ரூபாய் முதலீட்டில் 1625 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள SP Apparels Ltd., நிறுவனத்தின் நூற்பாலைகள் மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை;

காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டையில் 37 கோடியே 66 லட்சம் ரூபாய் முதலீட்டில் 65 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள Sakthi Steel Industries Ltd., நிறுவனத்தின் புதிய தொழிற்சாலை;

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், சமுத்திரப்பேடு கிராமத்தில் 47 கோடி ரூபாய் முதலீட்டில் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில்

நிறுவப்படவுள்ள Sun Estates நிறுவனத்தின் புதிய வாகன உதிரிபாக ஒருங்கிணைப்பு தொழிற்சாலை;

கோயம்புத்தூர் மாவட்டம், சின்னவேடம்பட்டி பகுதியில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் 168 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள Krishnaveni Carbon Products Pvt. Ltd., நிறுவனத்தின் கார்பன் சீல், பேரிங்குகள் உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை;

அத்துடன், சிப்காட் தொழிற்பூங்காக்களில் புதிதாக நிறுவப்படவுள்ள நிறுவனங்களான – திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சிப்காட் தொழிற் பூங்காவில் 80 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள Welbow Metals India Pvt. Ltd., நிறுவனத்தின் வாகன ஸ்டியரிங் உற்பத்தி தொழிற்சாலை;

வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை சிப்காட் தொழிற் பூங்காவில் 40 கோடி ரூபாய் முதலீட்டில் 230 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள Galvano Track Solutions Pvt. Ltd., நிறுவனத்தின் கனரக வாகன உதிரிபாக தொழிற்சாலை;

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சிப்காட் தொழிற் பூங்காவில் 10 கோடியே 34 லட்சம் ரூபாய் முதலீட்டில் 141 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்படவுள்ள Ranganayagi Papers Pvt. Ltd., நிறுவனத்தின் காகித உற்பத்தி தொழிற்சாலை;

என மொத்தம் 2375 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்படவுள்ள 13 நிறுவனங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம் இ.ஆ.ப., தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம் இ.ஆ.ப., தொழில் துறை சிறப்புச் செயலாளர் திரு.வி.அருண்ராய் இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் முனைவர் நீரஜ்மிட்டல், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குனர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன் இ.ஆ.ப., தொழில் திட்டங்களுக்கான வழிகாட்டி அலுவலர்கள், மற்றும் தொழில் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**